*8*

# கிறிஸ்து: நமது அன்றாட வாழ்வின் வழிகாட்டி

கிறிஸ்து நம்மை இரட்சிக்கும்படி உலகத்தில் வந்தார். நாம் ஒருமுறை இரட்சிக்கப்பட்டு விட்டால், நாம் எப்படி வாழ வேண்டும்? இந்தக் கருத்தை பொறுத்தவரை நம்மை இருளில் விட்டுவைக்கவில்லை. அவர் நம்முடைய இரட்சகர் மட்டுமல்ல, ஆனால் வாழ்வுக்கும் அவர் வழிகாட்டிதான். அவர் முன் நடத்துகிறார், திசை காட்டுகிறார், வழிநடத்தி போகிறார் என்பதால் இவ்வுலகிலும் பரிபூரண வாழ்க்கையை நாம் வாழமுடியும் (மறுமையிலும்) பரலோகத்திலும் அவரோடே கூட நித்திய நித்தியமாய் வாழமுடியும்.

இயேசு எப்படி நம்மை வழிநடத்துகிறார்? இந்தக் கேள்விக்கு சுருக்கமான பதில் அவர் தமது வேதத்தின் மூலம், தேவனுடைய வசனத்தின் மூலம் வழிநடத்துகிறார் என்பதுதான். கிறிஸ்துவைப் பற்றியும், அவரது வாழ்க்கையைப் பற்றியும், அவரது போதனைகளைப் பற்றியும் உறுதியாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அது அவருடைய வேதத்தின் மூலமாக - குறிப்பாக, அவருடைய புதிய ஏற்பாட்டின் மூலமாக மட்டுமே தெரிந்து கொள்ள முடியும், அது கிறிஸ்து இன்று ஜனங்களுடன் ஏற்படுத்தியுள்ள புதிய உடன்படிக்கை. இன்னும் அதிக குறிப்பாக ஒருவேளை நாம் கேட்கலாம், "புதிய ஏற்பாட்டின் மூலம் அவர் *எப்படி* நடத்துகிறார்?"

*முதலாவதாக, இயேசு தாம் சொன்னதைக் கொண்டு வழிநடத்துகிறார்.* இயேசு தேவனிடத்திலிருந்து வந்த போதகர் (யோவான் 3:2; காண்க யோவான் 13:13, 14). அவர் "ரபீ" என்று (யோவான் 1:38, 49; 6:25; "ரபூனி," யோவான் 20:16) சொல்லப்படுவது அவர் போதகராயிருந்தார் என்பதை சுட்டிக்காட்டின. அவருடைய சீஷர்கள் அவருடைய போதனையை பின்பற்றும்படி எதிர்பார்க்கப் பட்டார்கள். அவர் தமது பிரதான கற்பனையை அப்போஸ்தலருக்கு கொடுத்த போது, அவர்,

> ... வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் (மத்தேயு 28:18-20).

இயேசுவுக்கு சீஷர்களாய் வரப்போகிற காலங்களில் மாறுகிற யாவருக்கும் தமது சீஷர்களுக்கு உபதேசம் பண்ணின யாவற்றையும் போதிக்க வேண்டும் என்று இயேசு கட்டளையிட்டார். தொடரும் நிகழ்ச்சியாக அனைத்து கிறிஸ்தவர்களும்

இயேசுவின் போதனைகளைக் கற்று அவரைப் பின்பற்ற வேண்டும் (காண்க உதாரணமாக, நடபடிகள் 20:35). சிலர் நினைக்கிறதற்கு முரணாக,[1] இயேசுவின் போதனைகள் இன்று நமக்கும் பொருந்துபவைகள் தான்.

*இரண்டாவதாக, இயேசு தாம் எதைச் செய்தாரோ அதிலே நம்மை வழிநடத்துகிறார்.* இயேசு நமது முன் உதாரணம் அல்லது முன் மாதிரியாயிருக்கிறார். பேதுரு எழுதினார், "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தமது அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" (1 பேதுரு 2:21). இயேசுவின் நடத்தைகள் (திடீரென வந்த) ஒரு விபத்துமல்ல, நோக்கமில்லாததுமல்ல; தாம் சொல்கிறபடி அவர் வாழ்ந்தார், அதன்மூலம் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை புரிந்துகொள்ள உதவினார். தேவனுடைய ஜனங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை விளக்கப் படுத்துவது அவருடைய வாழ்க்கை பிரசங்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

*மூன்றாவதாக, தமது சீஷர்கள் சொன்னவைகளைக் கொண்டு இயேசு நம்மை வழிநடத்துகிறார்.* இயேசு தங்களுக்குப் போதித்தவைகளை மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டிய பொறுப்பாக இயேசுவின் பிரதான கட்டளை சீஷர்களுக்கு அமைந்தது. இயேசு பரமேறிச் சென்றபின் சகல அதிகாரமும் பெற்ற கிறிஸ்துவின் அதிகாரத்தின் பேரில், அப்போஸ்தலர்கள் போய் பிரசங்கித்தார்கள். முன்னதாக அவர், அவர்களுக்குச் சொல்லியிருந்தார்,

> ... அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது, எப்படிப்பேசுவோம் என்றும் என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேச வேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். பேசுகிறவர்கள் நீங்களல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர் (மத்தேயு 10:19. 20).

மேலும் இயேசு துணையாளரை அனுப்புவதாகச் சொன்னார் ("தேற்றரவாளன்"; KJV), அதாவது தமது அப்போஸ்தலர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்குவதைக் குறிப்பிட்டார்; அவர் வரும்போது அவர்களை "சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார்" (யோவான் 16:7, 13). பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கினபோது, "ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே" பேசினார்கள் (நடபடிகள் 2:4). அந்த நாளிலே அவர்கள் பேசினவைகளும் - அந்நேரத்திலிருந்து, சுவிசேஷத்தை அறிவித்தவைகளும் - பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் பேசினார்கள்.

ஆதலால், அவர்கள் போதித்தவைகள், கிறிஸ்துவின் அதிகாரத்தில் போதித்தார்கள். அவர்களின் வார்த்தைகள் கிறிஸ்துவே பேசின வார்த்தைகளைப் போன்ற அதிகாரம் பெற்றவைகளாயிருந்தன. அப்போஸ்தலரின் செய்திகள் எப்படி ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதை பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதின வார்த்தைகள் விளக்கமளிக்கிறது:

> ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக் கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல்,

> *தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது (1 தெசலோனிக்கேயர் 2:13).*

அப்போஸ்தலர்கள் பிரசங்கித்ததும் போதித்தவைகளுமான வார்த்தைகள் எவைகளோ அவைகள் இயேசு தாமே பேசின வார்த்தைகளைப் போன்று, தேவனுடைய வசனம்.

சில வேத புத்தகங்களில் இயேசு பேசிய வார்த்தைகள் வேதத்திலுள்ள மற்ற வசனப்பகுதிகளிலிருந்து, வித்தியாசப்பட்டவைகள் போல இயேசுவின் வார்த்தைகள் வேதத்தின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை அல்லது அதிகமாய் ஏவப்பட்டது போல வித்தியாசப்படுத்திக் காட்டும் பொருட்டு சிவப்பு மையில் அச்சிடப்பட்டிருக்கும். சிவப்பு எழுத்துக்கள் பிரயோஜனமுள்ள கருவியாக இருப்பதுபோலவே, அப்போஸ்தலர்கள் மற்றும் பிற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் போதித்தவைகள், ஏவப்பட்டது போலவும் இயேசுவின் வார்த்தைகளைப் போலவும், “சிவப்பு எழுத்து வார்த்தைகள்.”

ஆகையால். இயேசு தாமே போதித்தவைகளாலும் செய்தவைகளாலும், ஏவப்பட்ட அப்போஸ்தலர்களும் சுவிசேஷகர்களும் போதித்தவைகளும், நமக்கு புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளபடி, நம்மை வழிநடத்துகிறார். இன்னொரு வார்த்தையில் சொன்னால் ஏற்கனவே சொன்னபடி, இயேசு தமது வேத புத்தகத்தின் மூலம், குறிப்பாக தமது புதிய ஏற்பாட்டின் மூலமாக நம்மை வழிநடத்துகிறார்.

இயேசு நம்மை எங்கே வழிநடத்துகிறார்? அதாவது, இயேசு தமது வார்த்தைகளினாலும் ஜீவியத்தினாலும், என்ன செய்யும்படி வழிகாட்டுதலைக் கொடுக்கிறார்? சுருங்கச் சொல்லின், இயேசு தேவனிடத்தில் மனிதரிடத்திலும் நாம் அன்புகூர வழிநடத்துகிறார். “கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எது” என்று இயேசுவிடம் கேட்கப்பட்ட போது (மாற்கு 12:28), அவர் பதிலளித்து,

> *இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: “இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழுஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப்பலத்தோடும் அன்புகூருவாயாக” என்பதே பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: “உன்னிடத்தில் நீ அன்புகூருவது போல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக” என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார் (மாற்கு 12:29-31).*

இயேசு கிறிஸ்து தமது போதனைகளிலும் தமது முன்மாதிரியான வாழ்க்கையிலும், தேவனிடத்திலும் பிறனிடத்திலும் அன்புகூருவது என்றால் என்ன என்பதை விளக்கப் படுத்தினார்.

## அவர் தேவனிடத்தில் அன்புகூர நம்மை வழிநடத்துகிறார்

இயேசுவின் வார்த்தைகளும் செயல்களும் தேவனிடத்தில் அன்புகூருவது என்றால் என்ன பொருள் என்பதை விளங்கப் பண்ணியது. நாம் கீழ்ப்படிந்து அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டியவர்கள். நாம் இதை எப்படி செயல்படுத்துவோம்?

**சோதனைக்கு "இல்லை" என்று பதில் சொல்லுங்கள்.**

தேவன் பரிசுத்தராயிருக்கிறபடியால், அவர் எப்போதுமே தம்முடைய ஜனங்கள் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்று கேட்கிறார் (லேவியராகமம் 11:45; 1 பேதுரு 1:15). பிசாசின் சோதனைகளை எதிர்த்து நின்று பரிசுத்த வாழ்க்கைக்கு ஒரு முன்னுதாரணத்தை இயேசு கொண்டிருந்தார் (மத்தேயு 4). அவர் நம்மைப் போலவே எல்லா வகையிலும் சோதிக்கப்பட்டாலும், அவர் பாவம் செய்யவில்லை (எபிரெயர் 4:15). தம்மை பின்பற்றுவோர் சுத்தமாயிருக்க வேண்டும் என்று போதித்தார் (மத்தேயு 5:8, 27-30) இயேசுவின் சீஷன் என்று தன்னைச் சொல்லிக் கொண்டிருக்கிற எவனும், பாவத்தில் வாழ்ந்து, தெரிந்தே ஒழுங்கீனமான வாழ்க்கையை வாழுகிறவன், உண்மையில் இயேசுவின் வழிகாட்டலில் பின்பற்றி வருவதில்லை.

**தேவனுடைய வீட்டைக் குறித்து அக்கறைப்படுங்கள்.**

இயேசுவின் அக்கறையும், தேவனுடைய வீட்டைப்பற்றிய வைராக்கியமும், "காசுக்காரர்களையும்" தேவாலயத்தில் வியாபாரம் செய்து கொண்டிருந்தவர்களையும் விரட்டியடிக்கச் செய்தது (யோவான் 2:16, 17). இன்று சபை தேவனுடைய வீடாயிருக்கிறது (1 தீமோத்தேயு 3:15). இயேசு தமது சொந்த சபையென அழைத்து, அவர் தேவனுடைய குமாரன் எனும் விசுவாசமாகிய அஸ்திபாரத்தின் மேல் அதைக்கட்டவும் இயேசு அதில் அன்புகூர்ந்தார் (மத்தேயு 16:16-19). இயேசு கட்டியதும், தேவனுடைய வீடுமாயிருக்கிற சபையில் இயேசுவின் அன்பை பகிர்ந்து கொள்ளாமல் ஒருவர் இன்று தேவனை அன்புகூருவதாக உண்மையில் சொல்ல இயலாது.

**அவருடைய சித்தத்தைச் செய்யுங்கள்.**

தேவனுடைய ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள உச்சக்கட்ட கடமையே தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதுதான். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதுதான் இயேசுவின் ஜீவியமாக இருந்தது. "எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பினவருடைய சித்தத்தையே தேடுகிறபடியால்" என்று அவர் சொன்னார் (யோவான் 5:30ஆ; மேலும் காண்க 4:34; 6:38). தமது வாழ்வின் முடிவில், தேவனுடைய சித்தத்தை செய்வதென்றால் அர்த்தப்படுவது என்ன என்பதை, அவருடைய ஜெபத்தின் மூலம், "என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று சொல்லி தமது கீழ்ப்படிதலை வெளிப்படுத்தினார் (லூக்கா 22:42; KJV). பவுல் சொன்னதுபோல, அவர் "மரண பரியந்தம் கீழ்ப்படிந்தார்" (பிலிப்பியர் 2:8; மேலும் காண்க எபிரெயர் 5:7, 8).

*தேவனிடத்தில் அன்புகூருவது என்றால் கீழ்ப்படிதல் என்று பொருள் என்பது மட்டுமே என்று இயேசு விளங்கப் பண்ணாமல், கீழ்ப்படிதலின் அவசியத்தையும் அவர் போதித்தார். அவர் "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை ..." என்றார் (மத்தேயு 7:21). இயேசு தேவனிடத்தில் அன்புகூருதல் அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதலையும் உட்படுத்தியது என்று நமக்குக் காட்டினார். தேவனுக்கு கீழ்ப்படிதலை வினயமாக எடுத்துக் கொள்ளாத யாரும் உண்மையில் தேவனிடத்தில் அன்புகூருவதில்லை மற்றும் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதுமில்லை.*

***மார்க்க ரீதியாக நிபந்தனைகளை நிறைவேற்றுங்கள்.***

*சில வேளைகளில் கிறிஸ்து தமது சக மனிதர்களிடம் அதிக அக்கறை காட்டினார் என்று பிரசங்கிக்கப் பட்டார் (ஒரு வகையில், அவர் அப்படி செய்தார்) ஆனால் மோசேயின் பிரமாணத்தை கைக்கொள்ளுகிற விஷயத்தில் அவர் முற்றிலும் அக்கறையற்றவராயிருந்தார் என்றும் பிரசங்கிப்பார்கள் (இது உண்மையல்ல). கிறிஸ்து மோசேயின் பிரமாணத்தை மதித்தார்; அந்தப் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த அவர் அதன் நிபந்தனைகளையும் கைக்கொண்டார் என்பதற்காக சாட்சியங்களை புதிய ஏற்பாடு உண்மையென காட்டியுள்ளது.*

*முதலாவதாக, கிறிஸ்து நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டிருந்தார் என்று காட்டுகிறது. கிறிஸ்து "நியாயப்பிரமாணத்தின் கீழ்பிறந்தார்" என்று பவுல் சொன்னார் (கலாத்தியர் 4:4). ஓய்வு நாளில் ஜெபஆலயத்துக்குப் போவதை தமது வழக்கமாக இயேசு கொண்டிருந்தார் என்று சுவிசேஷப் புத்தகங்கள் அறிக்கையிடுகின்றன (லூக்கா 4:16). இயேசு யூதர்களின் பண்டிகைகளையும் கைக்கொண்டு, அவைகளை ஆசரிக்கும்படி எருசலேமுக்கு போனார் என்றும் சொல்லப்படுகிறது. கூடுதலாக, மற்ற யூதர்களைப் போலவே இயேசுவும் தேவாலயத்து வரியான அரை சேக்கலை வருடந்தோறும் செலுத்தி வந்தார் (மத்தேயு 17:24-27). இயேசு பாவமற்றவராக வாழ்ந்தார் (எபிரெயர் 4:15). இயேசு ஒரு மனிதராக, தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தார், ஆகிலும் அவைகளை மீறியிருப்பாரேயானால் மேற்குறித்த இப்படிப்பட்ட வாக்குமூலங்கள் அளிக்கப் பட்டிருக்காது.*

*இரண்டாவதாக, இயேசுவின் விரோதிகள் அவருக்கு எதிராக கொண்டு வந்த குற்றச்சாட்டுகளால் அவர் நியாயப்பிரமாணத்தை மீறி விட்டார் என்பது நிரூபிக்கப்படவில்லை. ஒரு வயலின் வழியாக நடந்து போய்க் கொண்டிருக்கையில் அவருடைய சீஷர்கள் கோதுமை கதிர்களை கொய்யத் தொடங்கினபடியால் ஓய்வுநாளை மீறி விட்டதாக இயேசுவின் விரோதிகள் குற்றஞ் சுமத்தினார்கள் (மாற்கு 2:23-28). இருப்பினும், இயேசுவின் சீஷர்கள் மோசேயின் பிரமாணத்தை மீறிவில்லை; அவர்களுடைய குற்றச் சாட்டுக்களெல்லாம் அவர்களுடைய ரபீமார்களின் பாரம்பரியத்தை மீறினார்கள் என்பதுதான். இன்னொரு சம்பவத்தில், பரிசேயர்களும் சதுசேயர்களும் இயேசு தமது சீஷர்கள் கை கழுவாமல் சாப்பிட அனுமதித்து விட்டதாக குற்றஞ் சாட்டினார்கள். மீண்டும், சீஷர்கள் மீறினதாகச் சொல் லப்பட்ட குற்றச்சாட்டு "முன்னோர்களின் பாரம்பரியங்களை மீறினார்கள்"*

என்பதுதான் (மத்தேயு 15:2). இயேசு தம்மைக் குற்றப்படுத்தினவர்களுக்கு மறுமொழியாக, அவர்கள் தங்கள் பாரம்பரியத்தினாலே, அவர்கள் "தேவனுடைய கற்பனைகளை மீறி" அவரை "வீணாக" ஆராதனை செய்ததாகக் குறிப்பிட்டார் (மத்தேயு 15:3, 9). இயேசு பிரமாணத்துக்கு கீழ்ப்படியவில்லை என்று கூறுவது இந்த உதாரணங்களைக் கொண்டு முடிவுக்கு வர முடியாது. தேவனுடைய பிரமாணத்துக்கு அதிக மரியாதை அவர் வைத்திருந்தார், ஆனால் மனித கற்பனகளுக்கும் முன்னோர்களின் பாரம்பரியத்துக்கும் குறைவான மதிப்பீட்டையே கொடுத்தார்.

மூன்றாவதாக, வேதபாரகருக்கும் பரிசேயர்களுக்கும் இயேசு சொன்ன வார்த்தைகள் தேவனுடைய பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதிலிருந்து ஜனங்களை விலக்கவில்லை. இயேசு சொன்னார்,

> மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசம பாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டுமே (மத்தேயு 23:23).

ஜனங்கள் இந்த வசனத்தை வாசித்துவிட்டு அடிக்கடி சொல்லுவதென்னவெனில், "நீதியிலும் இரக்கத்திலும் விசுவாசத்திலும்" மட்டுமே இயேசு ஆர்வமுடையவராக இருந்தார் என்றும் நியாயப்பிரமாணத்தின்படி தசம பாகம் செலுத்துவதைப்பற்றி கொஞ்சமும் அக்கறைப்படவில்லையென்று முடிவுக்கு வருகின்றனர். வசனப்பகுதி சில காரியங்களை முக்கியமானவை என்றும், அல்லது மற்றவைகளைக் காட்டிலும் "கனமுள்ளதென்றும்," போதிக்கும் நிலையில் இயேசு "கனமற்ற காரியங்கள்" முக்கியமற்றவை என்று அவர் கூறவில்லை. அவர், "இவைகளையும் [விசேஷித்தவைகளையும்] … செய்ய வேண்டும்; மற்றவைகளையும் [ஒற்தலாமிலும், வெந்தயத்திலும் சீரகத்திலும் தசம பாகம் செலுத்துவதை] விடாதிருக்க வேண்டும்" என்றார். யூதர்கள் நியாயப்பிரமாணத்தின் அற்ப விஷயங்களைக் கூட செய்து கொண்டிருந்ததில் தவறில்லை; இயேசுவும் அவைகளை அங்கிகரித்தார்! வேதபாரகரும், பரிசேயரும் சரிப்படுத்திக்கொள்ள வேண்டியதெல்லாம், நியாயப்பிரமாணத்தின் சடங்காச்சாரக் காரியங்களுக்கு கண்டிப்பான ஒட்டுறவைக் கொண்டிருந்த அவர்கள் அதின் மற்ற விசேஷங்களை புறந்தள்ளுவதைத்தான்.

இந்த உண்மைகளிலிருந்து நாம் என்ன முடிவுக்கு வருகிறோம்? இயேசு தாம் வாழ்ந்து கொண்டிருந்த பிரமாணம் எதன் கீழாக இருந்தாலும், அந்த தேவனுடைய பிரமாணத்தை எப்பொழுதும் கைக் கொண்டிருந்தார். ஆகவே, நாம் எந்தப் பிரமாணத்தின் கீழ் வாழ்கிறோம் என்பது முக்கியமானது. தேவனிடத்தில் உண்மையாக தான் அன்புகூருவதாகச் சொல்லும் எவரும், மார்க்க நிபந்தனைகளை கைக்கொள்வது முக்கியமற்றது என்று சொல்லமாட்டார். இயேசுவின் வார்த்தைகளையும் செயல்களையும் அடிப்படையாகக் கொண்டு, அன்பின் தேவன் நாம் பரிசுத்தமான வாழ்வை வாழ பிரயாசப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்று சொல்லலாம்; தேவனுடைய வீடாகிய, சபைக்கு நாம் அர்ப்பணித்த வாழ்க்கையை வாழ வேண்டும்; தேவனுக்கு

*கீழ்ப்படிவதே நமது வாழ்க்கையில் தலையாய குறிக்கோளாக இருக்க வேண்டும்; இப்பொழுதிருக்கிற தேவனுடைய பிரமாணத்தின் கோரிக்கைகள் மார்க்கரீதியாக கைக்கொள்ளப்பட வேண்டும்.*

## *நாம் மற்றவர்களை அன்புகூர அவர் வழிநடத்துகிறார்*

*இயேசு தமது ஜீவியத்தாலும் போதனையாலும், நம்மிடத்தில் நாம் அன்பு கூருவது போல, பிறரிடத்தில் அன்புகூர வழி நடத்துகிறார். அப்படிப்பட்ட அன்புக்கு தேவைப்படுவது என்ன?*

***அவர்களுக்கு ஊழியம் செய்யுங்கள்.***

*இயேசு ஊழியம் செய்யும் வாழ்வை வாழ்ந்தார். அவர் பூமியிலிருந்த வருஷங்களின் வாழ்வை சாரம்சமாக பேதுரு, "நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்தார்" என்றார் (நடபடிகள் 10:38). இயேசு சொன்னார், "மனுஷகுமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யும்படி வந்தார்" (மாற்கு 10:45அ). தமது ஊழியத்தின் முன்னுதாரணமாக அவருடைய சீஷர்களின் கால்களை கழுவினார் (யோவான் 13:1-12) மற்றும் அவர் தொடர்ந்து சொன்னார்,*

> *நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான், ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களை கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் (யோவான் 13:13-15).*

*இன்று தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்வோர் பிரதானமும் முதன்மையுமான இடத்தைத் தேடி, தங்களைத் தாழ்த்தி மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்ய தயங்குகிறார்கள், அவர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி வருவதில்லை. அவர்கள் மற்றவர்களிடம் அன்பு காட்ட வேண்டிய முறைப்படி காட்டுவதில்லை.*

***பாரபட்சமின்றி அவர்களுக்கு ஊழியம் செய்யுங்கள்.***

*தேவன் ஒவ்வொருவரையும் அன்புகூருவதுபோல, அவருடைய பிள்ளைகள் உயர்ந்தவர்கள், இனம், நிறம், தேசம், கலாச்சாரம் போன்ற எந்த வித்தியாசமும் பாராமல் எல்லாரிடத்திலும் அன்புகூர வேண்டும். இயேசு எல்லாருக்கும் நன்மை செய்தார். அவர் தமது சீஷர்களுக்கு ஊழியம் செய்தார், சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தார் (அப்படி செய்ததன் மூலம் அவர்களின் பெற்றோர்களையும் ஆசீர்வதித்தார்), குஷ்டரோகிகளையும் வியாதிப்பட்ட அநேகரையும் சுகமாக்கினார். பசியுள்ளவர்களை போஷித்தார், மரித்தோரை எழுப்பினார், துக்கத்தில் இருந்தவர்களுக்கு ஆறுதலளித்தார், தரித்திருக்கு நற்செய்தியை பிரசங்கித்தார், ஐசுவரியவான்களையும் சிநேகித்தார். தமது கலாச்சார விருப்பத்தைக் தாண்டி யூதரல்லாதவர்களையும் - தமது பிரசன்னத்தில்*

*- சமாரியர்களையும் மற்றவர்களையும் - தமது பிரசன்னத்தில் கொண்டு வந்து பாவிகளுக்கும் ஆயக்காரருக்கும் சிநேகிதராயிருந்தார். அவர் தம்முடைய சீஷர்களையும் அதேபோல செய்யும்படி போதித்தார்: அவரைப் போலவே, நன்மை செய்யும்படி சொன்னார் (மத்தேயு 7:12). அவர் வரும்போது, நாம் நம்முடைய சக மனிதர்களுக்கு ஊழியம் செய்தோமா இல்லையா என்று நியாயந்தீர்க்கப்படுவோம் (மத்தேயு 25:31-46). இன்று தங்களுடைய நண்பர்கள் மற்றும் குடும்ப வட்டாரங்களில் மட்டும் அன்புகூருகிறவர்கள், அவர்களிலிருந்து வித்தியாசப்பட்டவர்களை கீழ்நோக்கிப் பார்க்கிறவர்கள், கிறிஸ்து விரும்புகிறபடி அவர்கள் தங்கள் சக மனுஷரிடத்தில் அன்புகூருவதில்லை.*

***யாருக்கும் தீங்கு செய்யாமல் விலகுங்கள்.***

*இயேசு தமது சீஷர்கள் மற்றவர்களிடம் “சரிக்கு சரி” செய்வதிலிருந்தும், பழிவாங்குவதிலிருந்தும் தடை செய்தார் (மத்தேயு 5:38-42). உண்மையில் அவர், “உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்” என்று கிறிஸ்து சொன்னார் (மத்தேயு 5:44; காண்க ரோமர் 12:19-21). இயேசு தாம் போதித்தவைகளால் அர்த்தப்படுத்தியதை தம் வாழ்க்கையால் பிரதிபலித்தார். தமக்காக யுத்தம் செய்யும் பன்னிரண்டு லேகியோன் தூதர்களை அவர் பயன்படுத்தி தம்முடைய மரணத்திலிருந்து தப்பித்திருக்க முடியும் (மத்தேயு 26:53), ஆனால் அவர் அப்படிச் செய்ய வில்லை. சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும்போது தம்மை உபத்திரவப்படுத்துகிறவர்களை மன்னிக்கும்படி ஜெபித்தார் (லூக்கா 23:34). பேதுரு சொன்னார், “அவர் வையப்படும்போது வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய் தீர்ப்பு செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்” (1 பேதுரு 2:23). கிறிஸ்தவத்தின் உண்மையான பரீட்சையே ஒரு நபர் பகைக்கப்பட்டாலோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டாலோ உபத்திரவப்படுத்தப்பட்டாலோ அவர் எப்படி நடந்து கொள்கிறார் என்பதே.*

*இயேசு நம்மை எங்கே வழிநடத்துகிறார்? நம்மைப்போல பிறனையும் அன்புகூரும்படியாகவும், நமது சகல மனிதர்களையும் முறையாக நடத்தவும் வழிநடத்தப்படுகிறோம். மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய அவருடைய முன் மாதிரியைப் பின்பற்றுவோமானால் யாராக இருந்தாலும், யாரையும் புண்படுத்தாமல் அல்லது தனக்கு இழைக்கப்பட்ட தவறுக்காக பழிவாங்க தேடாமல் மற்றவர்களுக்கு நாம் ஊழியம் செய்வோம்.*

## முடிவுரை

*நமது வாழ்க்கைக்கு இயேசுவே வழிகாட்டி. அவர் சொல்லுகிற எல்லாவற்றிலும் அவருடைய முன் மாதிரியை பின்பற்றி அவருடைய “அடிச்சுவடுகளில்” நடக்க வேண்டும். நமது அன்றாட வாழ்க்கையில் அது என்ன பொருளைக் கொடுக்கிறது? சில வேளைகளில் இயேசுவின் வார்த்தைகளும் செயல்களும் எப்படி இன்று நமக்குப் பொருந்தும்? எல்லாவற்றிற்கும் அப்பால், இயேசு தேவன், நாம் அல்ல, ஆகையால், நாம் செய்யக் கூடாது - அல்லது செய்ய முயற்சிக்கக் கூடாது - அவர் செய்த எல்லாவற்றையும் செய்ய இயலாது.*

*உதாரணமாக, மற்றவர்களுடைய மனதில் இருப்பதை இயேசு அறிந்திருந்தபடியால் இயேசு அவர்களை நியாயந்தீர்க்க முடிந்தது. நாம்*

மற்றவர்களுடைய எண்ணங்களை அறியோம், எனவே நாம் அவர்களை நியாயந்தீர்க்க இயலாது.

இயேசு, மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தார், மற்றும் அவற்றை பூரணமாக கைக் கொண்டார். இயேசு செய்த சில கிரியைகள் மற்றும் போதித்தவைகள், நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தல் சம்பந்தப்பட்டதாக இருந்தது. அவைகள் நமக்கு நேரடியாக பொருந்தாவிட்டாலும், அவர் போதித்த தத்துவங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடும்.

இயேசு செய்த சில கிரியைகள் இன்று நடைமுறையில் இல்லாத சில பழக்கங்களைக் கொண்டிருந்தது. அந்த செயல்களைக் குறித்து, நமது காலத்தில், நமது கலாச்சாரத்தில், அவருடைய போதனைகளும் செயல்களும் எப்படி நமக்குப் பொருந்தும் என்று நாம் தீர்மானிக்க வேண்டும்.

"இயேசு என்ன செய்வார்?" என்ற கேள்விக்கு சில வேளைகளில் பதிலை அறிந்து கொள்வது இயலாததாயினும், *இயேசுவின் சீஷர்கள் அந்தப் பதிலைக் கண்டுபிடிக்க வினயமான முயற்சி எடுக்கிற சவாலை ஒவ்வொரு சூழ்நிலையிலும் சந்திக்க வேண்டும். பிறகு நம்மை நடத்துகிற ஒருவரை பின்பற்றி நமது வாழ்க்கையை நடத்தும்படி விட வேண்டும்.* அவருடைய அடிச்சுவடுகளை நாம் பின்பற்றிப்போக நம்மால் இயன்றவரை முயற்சிப்போமானால், இப்பொழுது நாம் பரிபூரண ஆசீர்வாதங்களை இந்த வாழ்க்கையில் அனுபவிக்கமுடியும், மற்றும் கிறிஸ்துவுடன் என்றென்றைக்கும் வாழவும் முடியும்.

---

குறிப்பு

[1]இயேசு சிலுவையிலே மரிக்கும் வரை பழைய ஏற்பாடு நடுவிலிருந்து எடுத்துப்போடப்படவில்லையாதலால், பழைய உடன்படிக்கையைக் குறித்து இயேசு சொன்னவைகள் பூமியில் வாழும் போது போதித்தவைகள் புதிய உடன்படிக்கையில் வாழ்வோருக்கு பொருந்தாது என்று சிலர் போதிக்கின்றனர். மத்தேயு 28:18-20 இந்த உபதேசத்தை பொய்யாக்குகிறது. கூடுதலாக, அந்த கண்ணோட்டத்தை ஏற்றுக்கொள்வோர் விநோதமான இந்தக் கருத்தை, அதாவது கிறிஸ்தவர்கள் தங்களுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் போதனைகளை பின்பற்ற வேண்டியதில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.